

Vol.27 | No. 9 | September 2023
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



St Alphonsa Feast Celebration
Nagercoil, 2023 July 30




Vianney Day Celebration,
Mukkuttukal, 2023 August 04



**New *Taksa* Practice,**
**Sangamam, Thuckalay, 12.08.2023**




**St. Alphonsa Academy award ceremony at**
**Nagercoil, 20.08.2023**



**SMYM, Welcome to Relic of St.John Paul II,**
**St.Paul's Church, Thettiyode, 20.08.2023**

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 27 No :09 SEPTEMBER 2023



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. Edwinson**

**Mr. Iyathurai**

**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

DTP & Design

**M.R.Merin Sujith**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் | 08 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 12 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 13 |
| இல்வாழ்வு இயக்கம் | 16 |
| வின்செண்ட் தே பவுல் சங்கம் | 19 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 20 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 21 |
| நலவாழ்வு பணிக்குழு | 23 |
| புலரி சமூக சேவை சங்கம் | 25 |
| மறைமாவட்ட செய்திகள் | 27 |
| தென்காசி மறைபரப்புதள செய்திகள் | 30 |
| மறைவட்ட செய்திகள் | 33 |
| MONTHLY AGENDA - August 2023 | 41 |
| BISHOP'S ENGAGEMENTS | 43 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/149/2023**

**31 August 2023**

**Dear Readers,**

Greetings from Bishop's House, Thuckaly!

In this circular, I want to reflect with you on the nature and importance of the celebration of the Eparchial Assembly in our Eparchy. As you are aware, the Synod of Bishops of the Syro-Malabar Church which was held in January 2022 decided to convene the 5 th Major Archiepiscopal Assembly in August 2024. The preamble of the Statutes of the Major Archepiscopal Assembly says that the Major Archepiscopal Assemblyis the gathering together of a representative cross-section of the Church, integrating the spirit and dynamism of the ancient ecclesial institution of the Thomas Christians called Yogam, to seek closer ecclesial integration and collaboration among the various members for building up of the Body of Christ to its fullness through the mutual sharing of ideas, experiences and spiritual gifts.

Conscious of the Church's mission to announce the gospel and to promote unity in the pluralistic religious and ecclesial context of India as well as the larger worldwide diaspora, the Major Archepiscopal Assemblypursues a better understanding of and cooperation with the other Churches both within and without the Catholic communion, while promoting dialogue that is inter-religious, inter-ecclesial and inner-ecclesial. So that the kingdom of God may ever more potently leaven the mass of humanity, the Assembly reviews the various areas of the Church's apostolate and service to the world and explores more efficacious ways

The proposed theme for the 5th Major Archepiscopal Assembly is "Mission and life of the Syro-Malabar Church in response to the needs of the time." The Synod of Bishops proposed that the entire celebration of the Assembly will be held in three phases. The first phase consists of identifying topics under the proposed theme and formulating the preparatory document. In the second phase, all the

eparchies within the SyroMalabar Church are asked to conduct their eparchial assemblies based on the same theme and preparatory document but studying from the respective eparchial contexts. In the final phase, the Major Archiepiscopal Assembly will be celebrated in August 2024.

Based on the theme of the Assembly, in the first phase, four topics were identified. They are:

- A Church that listens to the Holy Spirit
- Renewal of faith formation in the Syro-Malabar Church
- Active participation of the lay faithful in the proclamation of the Gospel
- Empowering the Syro-Malabar community.

The preparatory document or Lineamenta that was prepared explains each of these themes. It, then, spells out the strengths and the weaknesses that exist in the Church. The Lineamenta also suggests ways to overcome the weaknesses that hamper the vibrant growth of the Church. I am sure you have already read through the Lineamenta and identified those issues that have a bearing on our eparchy.

As part of the second phase, we shall have the eparchial assembly in our eparchy from 28-30 September 2023. It will be held at Sangamam. I expect over 70 representatives from priests, religious and laity to take part in the assembly. The eparchial assembly is a representative organ that assists the eparchial bishop in the governance of the eparchy. It is a consultative body to reflect, discuss and offer advice to the bishop in matters of ecclesial concern. It is also meant to assist the eparchial bishop in those things that regard the special needs or advantages of the eparchy (can. 235, CCEO). The assembly can propose legislative acts in the eparchy.

We can delineate the main purposes of the eparchial assembly. They include

- To address the pastoral concerns and difficulties in the eparchy and propose appropriate norms.
- To address errors in doctrine or activities which might arise in the eparchy.
- To promote a closer communion and greater cooperation between bishop, clergy, religious and faithful.
- Internal life of the Church in the eparchy

The code of canon law for the Eastern Churches lays down several

responsibilities to the eparchial bishop about the organisation of the assembly. They include:

- To call the eparchial assembly as often as circumstances recommend it in the judgment of the eparchial bishop after he has consulted the presbyteral council (can. 236).
- To determine matters for discussion (can. 240 §2).
- To set the agenda
- To preside over the assembly
- To transfer, postpone, suspend or dissolve it (can. 237 §1)

About the participants of the eparchial assembly, canon 238 - §1 stipulates that the following are to be summoned to the eparchial assembly and must be present for it:

- The protosyncellus, syncelli, judicial vicar and eparchial finance officer;
- The eparchial consultors;
- The protopresbyters;
- At least one parish priest from each Forane is to be elected by all of those who have the care of souls, the protopresbyter presiding over the election; another presbyter is to be elected as an alternate to fill in for him if he is impeded.
- The members of the presbyteral council and some delegates of the pastoral council, if it exists, are elected by the same council in the manner and number established by particular law.
- Some deacons elected according to the norms of particular law;
- Superiors of monasteries sui iuris and some superiors of other institutes of consecrated life which have houses in the eparchy, to be elected in the manner and number established by particular law;
- Lay people elected by the pastoral council, if it exists, or designated in some other manner determined by the eparchial bishop so that the number of lay people does not exceed one-third of the members of the eparchial assembly.
- The eparchial bishop, if he judges it opportune, can invite to the eparchial assembly others also, not excluding persons of other Churches sui iuris, to all of whom he can even grant the right to vote.

- Some observers from non-Catholic Churches or ecclesial communities can also be invited to the eparchial assembly.

Like the convening of the Major Archepiscopal Assembly, the convocation of the eparchial assembly consists of

- Decree of convocation by the Bishop
- An outline (Lineamenta) of the theme for discussion is to be prepared six months before
- Based on opinions collected, a working paper is to be prepared and to be sent to the members of the assembly 30 days before the meeting.

We have already taken several steps to prepare for the assembly. They include:

- Discussions on the eparchial assembly were held at the Presbyteral Council held on 30 August 2022.
- On 26 November 2022, Rev. Fr Jose Ettolil animated the elected representatives at Sangamam.
- On 8 December 2022, the decree of convocation of the first eparchial assembly was issued.
- Further discussions on the assembly were held at the Presbyteral Council on 25 February 2023
- Classes and discussion based on the theme "Mission and Life of the Syro-Malabar Church in response to the needs of the time" was held in the Pastoral Council on 20 May 2023.
- A steering committee was formed on 20 June 2023 to conduct the assembly. The steering committee members are the following: Co-ordinator – Rev. Fr Thomas Pawathuparampil, General Secretary – Rev. Fr Joshy Kulathumkal, Joint Secretaries – Rev. Fr Joseph Santhosh and Rev. Fr Sajan Netappongu, Members – Rev. Fr Antony Jose, Rev. Fr Anil Raj Dominic, Rev. Fr Abhilash Xavier Raj, Rev. Sr Jessy Therese CMC, Mr John Kumarithozhan and Mr Shonic Regan. During the meeting, the theme of the eparchial assembly was finalised: "Mission and Life of the Syro Malabar Church: in the present context of the eparchy of Thuckalay."
- The preparatory document (Lineamenta) was published on 11 July 2023.
- The working document (Instrumentum Laboris) was published on 28 August 2023.

The priests who will participate in the eparchial assembly are the following: Fr Thomas Powathuparampil, Fr Joshy Kulathumkal, Fr Johnsilal Arackaparampil, Fr Thomas Sathianesan, Fr Antony Jose, Fr Jose Muttathupadom, Fr Joseph Santhosh, Fr Toji Parambilparambil, Fr Augustine Thalodil, Fr Thomas Thekkethala CMI, Fr Joshy Thevalakkara CMI, Fr Mathew Arekalam CMI, Fr Dency Mundunadackal, Fr Peter Kizhakkeyil, Fr Abilash Xavier Raj S., Fr Ajeesh Attiyil, Fr Jimmy Thekkekadumathil, Fr Justin Cheruvelil, Fr Aby Poovathummoottil, Fr Anil Raj Dominic, Fr Sajan Nettaponghu, Fr Christudas, Fr Martin Kandamparampil MST, Fr Robin Koorumullil, Fr Justin Sutheesh, Fr Printo Kurias, Fr Sumesh Valliyamthadathil, Fr Ajin Jose and Fr Vinu D. Joseph.

The priests who participate have to spend three full days in Sangamam, and hence, I request the participantsto come prepared to spend the days in Sangamam. Kindly arrange the pastoral activities in your respective parishes/institutions accordingly. Staying together, celebrating the liturgy together, and praying together will enrich the proceedings of the assembly. Kindly encourage the lay participants from your respective parishes/institutions by insisting with them that they prepare well for the assembly.

We have formed different committees for the smooth functioning of the assembly. Some of the committees have already begun their work while others will become active during the days of the celebration of the assembly. I invite those who are given the charges to dedicate with maximum commitment to the successful conduct of the assembly. These committees include:

- Steering committee
- Drafting committee
- Programme committee
- Liturgical Committee
- Food committee
- Cultural programme committee
- Media, Internet and publicity committee
- Registration, reception committee
- Transportation committee
- Accommodation committee
- Medical aid committee
- Resource persons committee
- Timekeeping committee
- Documentation committee

- Formation of groups and assignment of the places for discussion


On 3 September you will receive the circular letter together with postures and copies of prayer for the preparation. Kindly conscientize the faithful in our parishes and request them to use the prepared prayer to pray daily for the success of the assembly. Let us intensify our prayers, dear Fathers, so that the forthcoming assembly may bear abundant fruits that will take forward our eparchy spiritually. May the celebration of the assembly become a Pentecost where our priests, religious and lay people receive an outpouring of the Spirit and become enthusiastic in proclaiming the gospel like the Apostles!With my prayers and blessings,

The birthday of the Blessed Virgin Mary, also known as the Nativity of the Blessed Virgin Mary or simply Mary's Birthday, is observed on 8 September each year. In our Syro-Malabar tradition, it is an important feast and it is normally preceded by an eight-day fast. Needless to say, our Blessed Virgin Mary holds a special and significant role in the life of a priest. Her role goes beyond theological and devotional aspects and encompasses several dimensions. Mary is our spiritual mother; she is our model of obedience and surrender; she is our intercessor and advocate; she is an example of humility and service; she is the protector of priestly vocations; she guides us in imitating Christ; and, she plays a great role in liturgy and devotion. Thus, the Blessed Virgin Mary plays a significant part in the life of a priest. The central role that Mary plays in the salvation history from the birth of Jesus Christ up to the early life of Christianity makes her someone unique intercessor in coming to the aid of priests. Just as Mother Mary plays a unique role in the lives of priests, she also plays a similar role in the life of every believer. As priests, we must make the believers appreciate the role of Mary and inculcate a genuine love for her among the followers of her son. We need to promote and nurture Marian devotion among the Catholics who are entrusted to our care. With my prayers and blessings,

Yours in Christ Jesus,

✝ George Rajendran SDB



Bishop of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

ஆயர் சுற்றுமடல்

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

## Circular letter No/GR/44/2023

### ஆயர் சுற்றுமடல்

***ஈசோமெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் ஈசோமெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!***

கிறிஸ்தவ மரபின்படி ஒழுகி, கடவுளின் மீட்புப் பணியில் பங்கேற்கும் நிகழ்வை திருவழிபாடு எனலாம். இதன் வழியாக நமது மீட்பரும் தலைமைக் குருவுமான மெசியா திருச்சபையில் வாழ்ந்து, மீட்புப் பணியைத் தொடர்கிறார் (CCC 1069). ஆகையால் திருவழிபாடு திருச்சபையின் மிகவும் உன்னதமானப் பணியாக இருக்கிறது. 'திருப்பலிக் கொண்டாட்டம் வழியாக திருச்சபை அதன் உண்மையான இயல்பைப் பெறுகிறது" என்று இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கூறுகிறது. நேரிய கிறிஸ்தவ வாழ்வை அமைத்துக் கொள்ள திருப்பலி அவசியம். திருப்பலி வழியாக திருச்சபை கட்டியெழுப்பப்படுகிறது. வளர்ச்சியடைகிறது. திருப்பலியில் நம்பிக்கை கொள்ள வேண்டும், அதைக் கொண்டாட வேண்டும், அதை வாழ்வாக்க வேண்டும்.

'கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சியுமாக திருப்பலி திகழ்கிறது." கிறிஸ்தவ வாழ்வோடு ஒன்றிணைந்தத் திருப்பலியின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அதை தூயதாகவும், பயன் தரும் விதத்திலும் கொண்டாட வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் நாம் அறிந்திருத்தல் இன்றியமையாதது. நமது தந்தையாகிய மார்தோமாவின் நம்பிக்கையோடு பிணைக்கப்பட்டதாகவும், கீழைத்திருச்சபை மரபின் பகுதியாகவும் சீரோமலபார் திருப்பலி முறையானது விளங்குகிறது.

நம்முடைய மரபின் பகுதியாக இருந்து வந்த திருப்பலி முறை, வரலாற்றில் ஏற்பட்ட இடையூறுகளால், சிதைவை சந்தித்தது. அதனை முழு வடிவத்தில் மறுசீரமைத்து நடைமுறைக்குக் கொண்டு வரும் முயற்சிகள், பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டன. அதன் முதன் முயற்சியாக, மறுசீரமைக்கப்பட்ட சீரோமலபார் இராசை முறையை, 1986

ஆம் ஆண்டு, திருத்தந்தை இரண்டாம் ஜாண்பால் அவர்கள் கோட்டயத்தில் வைத்து நிறைவேற்றி தொடங்கி வைத்தார். தொடர்ந்து நடந்த ஆய்வுகள் மற்றும் விவாதங்களின் விளைவாக மேலும் சில மாற்றங்கள், திருப்பலி முறையில் கொண்டு வரப்பட்டன. கடைசியாக, 2021 ஜூன் மாதம் 9 ஆம் தேதி புதுப்பிக்கப்பட்ட திருப்பலி நூலுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒப்புதல் அளித்தார். இது 2021 நவம்பர் மாதம் 28 ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது.

சீரோ-மலபார் திருச்சபை, தமிழ்நாட்டில் கன்னியாகுமரியில் திருத்தொண்டுப் பணியை 1960 ஆம் ஆண்டுத் தொடங்கியது. திருத்தொண்டுத் தொடங்கப்பட்ட காலத்தில், அன்று நடைமுறையில் இருந்த மலையாளத் திருப்பலி முறை தமிழாக்கம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டது. பின்னர் 1986 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட திருப்பலி முறை மலையாள மொழியில் அறிமுகப்படுத்தப்பட்டப் போது, அம்முறையும் தமிழாக்கம் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு அளிக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு தக்கலை மறைமாவட்டம் உருவாக்கப்பட்டதிலிருந்து, நடைமுறையில் இருந்த தமிழ் நூலில் காணப்பட்ட மொழி, அமைப்பு மற்றும் பொருள் குறைபாடுகளை மாற்றுவதற்கான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக 2006 ஆம் ஆண்டு, அன்றைய தக்கலை மறைமாவட்டத்தின் ஆயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களின் தலைமையில் குழு உருவாக்கப்பட்டு புதுப்பித்தல் பணி நடந்தது. பணிகள் நிறைவடைந்த நிலையில் அதே ஆண்டில், சீரோ-மலபார் திருச்சபையின் திருவழிபாட்டு ஆணையத்திடம் ஒப்புதலுக்காக அளிக்கப்பட்டது. 28 நவம்பர், 2006 அன்று சீரோ-மலபார் திருச்சபையின் தலைவர் மார் வர்க்கி விதயத்தில் C.Ss.R. அவர்களின் சம்மதத்துடன், திருவழிபாட்டு ஆணையத் தலைவர் மார் பால் சிற்றிலப்பள்ளி அவர்கள் புதுப்பிக்கப்பட்ட நூலுக்கான ஒப்புதலை அளித்தார்.

மேலும், மாற்றங்களுடன் புதுப்பிக்கப்பட்ட திருப்பலி நூலானது 2021 ஆம் ஆண்டில் மலையாள மொழியில் வெளியிடப்பட்ட போது அதை உடனடியாக தமிழில் வெளியிடுவதில் சிக்கல் நிலவியதால், முக்கியமான மாற்றங்கள் வழக்கத்தில் இருந்த நூலில் ஏற்படுத்தப்பட்டு, பயன்பாட்டிற்கென அனுமதிக்கப்பட்டது. தமிழில் வெளியிடுவதற்கான முயற்சிகளும் அத்தோடு தொடங்கப்பட்டன.

மொழிப்புலமை, இசைஞானம், திருவழிபாட்டு முறைப்பற்றியத் தெளிவு ஆகியவைக் கொண்ட அறிஞர்களின் குழு, எனது தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. மொழியாக்கம் நுணுக்கமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டப் பின்னர் உயர் பேராயரின் ஒப்புதலுக்காக மே 12, 2023 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. சீரோ-மலபார் சபையின் திருவழிபாட்டு

ஆணையம் சில திருத்தங்களை முன் வைத்தது. அத்திருத்தங்களை உயர் பேராயர் 26 மேய், 2023 அன்று கடிதம் வழியாகத் தெரிவித்தார். அதற்கேற்ப மொழியாக்கத்தில் திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. நூலின் இறுதி வடிவம் வெளியிடுவதற்கான ஆணையானது, உயர் பேராயரால் ஜூலை 03, 2023 அன்று அளிக்கப்பட்டது. அத்தோடு, புதுப்பிக்கப்பட்ட முறையானது தூய கன்னிமரியாவின் விண்ணேற்புத் திருநாளான ஆகஸ்ட் 15, 2023 அன்று நடைமுறைக்குக் கொண்டுவரவும் ஆணை வெளியிட்டார்.

கீழைத்திருச்சபைக்கான திருத்தூதுப் பீடத்தின் அறிவுரைப்படியும், சீரோமலபார் திருச்சபையின் உயர் பேராயரின் ஆணைப்படியும், நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட, இராசை, ஆடம்பர மற்றும் சாதாரண திருப்பலி முறைகளின், தமிழாக்க நூல் 2023 ஆகஸ்ட் 15 முதல் நமது மறைமாவட்டத்தில் நடைமுறைக்கு வருவதாக நான் இச்சுற்றுமடல் வழியாக தெரிவிக்கிறேன். சிரமம் மிக்க இப்பணியை மேற்கொள்ள உதவிய மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைய இயக்குநர் அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்களுக்கும், மொழியாக்கத்தில் முக்கிய பங்கு வகித்த அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களுக்கும், திருவழிபாட்டுகுழுவின் இதர உறுப்பினர்களுக்கும் இத்தருணத்தில் இதயம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுப்பிக்கப்பட்ட நூல் தமிழில் வெளிவரும் இவ்வேளையில், திருவழிபாட்டை குறிப்பாக திருப்பலியை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாடுவதற்காக கீழ்வரும் நெறிமுறைகள் உதவும். அவற்றை பின்பற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் இதுவரை பயன்படுத்தி வந்த திருப்பலி முறையில் ஒரே ஒரு நற்கருணை மன்றாட்டுமுறை மட்டுமே இருந்தது. அதன் பெயர் மார் அத்தாயி மார் மாறி அனாஃபரா, அதாவது நற்கருணை மன்றாட்டுமுறை. இதையே நாம் எல்லா நாட்களிலும் பயன்படுத்தி வந்தோம். புதிய நூலில் மேலும் இரண்டு நற்கருணை மன்றாட்டு முறைகள் இணைக்கப்பட்டுள்ளன. அவை முறையே, தியதோரின் முறை என்றும் நெஸ்தோரியன் முறை என்றும் அறியப்படுகின்றன. மேலும், நமது வழிபாட்டுமுறை ஆண்டுக்கு ஒன்பது காலங்களைக் கொண்டது. ஒவ்வொரு காலத்திலும் பயன்படுத்த வேண்டிய மாற்று செபங்கள், பாடல்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. அத்தோடு, நமது ஆண்டவரின் முக்கிய திருநாள்கள், புனித கன்னிமரியா, திருமுழுக்குயோவான்,புனிதயோசேப்புஎனசிறப்புதிருநாள்களுக்கெனவும் செபங்களும் பாடல்களும் இணைக்கப் பட்டுள்ளன. அவை மட்டுமன்றி புதிய நூலில் மொழியில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆகையால் இறைமக்கள் அனைவரும் திருப்பலி நூலை பயன்படுத்தி

கவனமுடன் திருப்பிலியில் பங்கேற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மறைக்கல்வி மாணவர்கள் அவசியம் திருப்பலி நூலை பயன்படுத்தியாக வேண்டும். நம்முடைய வழிபாடுகள் தமிழ் மொழியில் நடைபெறுவதால், பிள்ளைகள் தமிழ் மொழி வாசிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். அதைப் பெற்றோர்கள் மனதில் கொண்டு செயல்பட நினைவுறுத்துகிறேன்.

திருவழிபாட்டில் பாடற்குழுவிற்கென முக்கியப் பங்கு உண்டு. பாடல்கள் மற்றும் வேண்டுதல்கள் வழியாக இறைமக்கள் வழிபாட்டில் முழுமையாகப் பங்கேற்க உதவும் விதத்தில் பாடற்குழு செயல்பட வேண்டும். தங்களது திறமைகளை முதன்மைப்படுத்தாமல், இறைவனை ஆராதிக்க இறைமக்களுக்கு உதவும் பணியைச் செய்கிறோம் என்னும், எளிய பணிவிடையின் மனநிலையுடன் செயல்பட வேண்டும். இறைமக்களுக்குத் தெரிந்த பாடல்களை பாடுதல் சிறந்தது. ′ஒரு முறைபாடுபவர் இருமுறை செபிக்கிறார்′– என்னும் புனித அகுஸ்தினாரின் மொழிகள் நம் நெஞ்சில் இருக்கட்டும்.

ஒற்றுமையில் நாம் வளர்ந்திட, சீரோ மலபார் ஆயர் பேரவையின் தீர்மானத்தின்படி, புதிய நூலில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு ஏற்ப, நம் மறைமாவட்டத்தில் திருப்பலியை ஒப்புக் கொடுக்க கேட்டுக்கொள்கிறேன். நமது மறைமாவட்டத்தில் சிறப்பாக கவனத்தில் கொள்ள வேண்டிய இதர அறிவுரைகள் பின்னர் உங்களுக்குத் தரப்படும்.

திருப்பலியை அர்த்த மிக்க முறையில் கொண்டாடுவோம். திருப்பலியை மைப்படுத்திய வாழ்வை மேற்கொள்வோம். இவ்வாறாக மெசியாவின் வாழ்வு தரும் பிரசன்னத்தை அனுபவித்தறிவோம். மேன்மைமிக்கத் திருப்பலியை முறையாகக்கொண்டாடும் ஆற்றலை வலுவற்றவர்களாகிய நாம் பெற்றிட இறையை வேண்டுவோம். நமது அன்னையின் விண்ணேற்புத் திருநாள் வாழ்த்துகளை இவ்வேளையில் மிகவும் மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்தக்கொள்கிறேன்.

என்றும் ஈசோ மெசியாவில்

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

☦ **மார் ஜார்ஜ் இராஜேந்திரன்** SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

**குறிப்பு :** இச்சுற்றுமடலை 13.08.2023, ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் வாசிக்க வேண்டும்

HOLY CHILDHOOD குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

***குழந்தைகளே, "உங்கள் தந்தையாகிய எனக்கு செவிசாயுங்கள்.நான் கூறுவதன்படி செயல்படுங்கள். அப்பொழுது காப்பாற்றப்படுவீர்கள்" - சீராக் 3 : 1***

குழந்தை ஈசோ இயக்க மறைமாவட்ட ஊக்குவிப்பாளர்களின் கூட்டமானது இணையதளம் வழியாக ஜூலை 8 மற்றும் ஆகஸ்ட் 23 ஆகிய இருநாட்கள் இரவு 8.15 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒவ்வொரு மாதமும் பங்களவில் நடத்தவேண்டிய நிகழ்வுகளை குறித்து கலந்தாலோசிக்கப் பட்டது. அதன் அடிப்படையில்

ஜூலை மாதம் ஓவியப்போட்டி - புனித அல்போன்சம்மா

ஆகஸ்ட் - மரியன்னை வேடமணிந்து 30 second video செய்தல்.

செப்டம்பர் மாதம் 5 ம் தேதி புனித அன்னை தெரேசாவின் திருவிழாவை ஒட்டி பங்குகளில் நோய்வாய்ப்பட்டிருக்கின்ற ஒரு நோயாளியின் குடும்பத்தை குழந்தை ஈசோ இயக்கத்தின் ஆசிரியர்கள் மற்றும் உறுப்பினர்கள் சந்தித்து, அவர்களுடன் சேர்ந்து ஜெபம் செய்ய வேண்டும்.

அக்டோபர் மாதம் - அழுகாத பொருட்கள் வைத்து செபமாலை தயாரித்தல். ஒவ்வொரு பங்குகளிலும் மேற்கூறிய நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன

***அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்***
***இயக்குநர்***

| BIRTHDAY OF REV. FATHERS SEPTEMBER - 2023 | |
|---|---|
| Fr. Jose Muttathupadom | 02 |
| Fr. Shoji Puthenpurackal | 23 |
| Fr. Mathew Kuzhinjalil | 28 |
| Fr.Joice Chelachuvattil MCBS | 30 |

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர்

இயக்கம் **SMYM**

## அரைநாள் கருத்தமர்வு: பெண்மையைப் போற்றும் மனித நேயம்

மணிப்பூரில் நடந்த பெண்களுக்கெதிரான வன்முறைகின் சூழலில், பெண்களின் மாண்பைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில், 'பெண்மையைப் போற்றும் மனித நேயம்' என்னும் தலைப்பில், தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் சார்பில் அரைநாள் உள்ளரங்க கருத்தமர்வு 2023 ஆகஸ்ட் 06 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணியளவில் நடைபெற்றது. மறைமாவட்ட தலைவர் மனோஜ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் தலைமையுரை வழங்கினார். SMYM துணைத்தலைவர் அஞ்சனா பெண்மையை பற்றி கருத்து வழங்கினார். சமூக ஆர்வலர் திருமதி. பரிமளச்செல்வி அவர்கள் கருத்தாளராக கலந்து கொண்டு இந்நிகழ்வை வழிநடத்தினார். இறுதியில் பாலப்பள்ளம் SMYM உறுப்பினர் ஜெனிக்கா நன்றியுரை கூறினார். இந்நிகழ்வுகளில் இளையோர்கள், பொது நிலையினர் என சுமார் 45 பேர் கலந்து கொண்டனர்.

## மணிப்பூர் மக்களுக்காக சிறப்பு ஆராதனை

மணிப்பூர் மாநிலத்தில் அமைதி நிலவ தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் சார்பாக சிறப்பு ஆராதனை 2023 ஆகஸ்ட் 13 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் தெற்றியோடு, புனித பவுல் ஆலயத்தில் நடைபெற்றது. Jesus Dreamz Music Band இளையோர்கள் வழிநடத்தினர். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமைதாங்கினார். இளையோர்கள், தெற்றியோடு ஆலய பங்கு மக்கள் என சுமார் 60 பேர் கலந்து கொண்டனர்.

## இந்திய சுதந்திரதின மற்றும் அன்னை மரியாள் விண்ணேற்பு திருவிழா கொண்டாட்டம்

தக்கலை பிலாங்காலை மறைவட்ட SMYM சார்பாக இந்திய சுதந்திரதின மற்றும் அன்னை மரியாள் விண்ணேற்பு திருவிழாக் கொண்டாட்டம் 2023 ஆகஸ்ட் 15 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் பிலாங்காலை, குழந்தை தெரசா மறைவட்ட ஆலய வளாகத்தில் நடைபெற்றது. பிலாங்காலை மறைவட்ட இயக்குநர் பேரருட்தந்தை ஜோஷி தேவரக்கர CMI தலைமையேற்று துவக்கவுரை வழங்கினார். தொடர்ந்து இளையோர்களுக்கு



போட்டிகள் நடைபெற்றது. மதியம் 2.00 மணியளவில் பரிசளிப்பு நிகழ்வுகள் ஆரம்பமானது. மறைவட்ட ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி எலைசா FCC அவர்கள் தலைமை தாங்கினார். ஆனையடி இளையோர்கள் இறைவணக்கம் பாடினர். சபிதா வரவேற்புரை வழங்கினார். பரைக்கோடு SMYM உறுப்பினர்கள் தலைமையில் சிறப்பு நடனம் நடைபெற்றது. மறைமாவட்ட தலைவர் மனோஜ் சிறப்புரை வழங்கினார். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். கைசாலவிளை ஆலய இளையோர்கள் முதல் பரிசும், காட்டாத்துறை ஆலய இளையோர்கள் இரண்டாம் பரிசும் பெற்றனர். நிகழ்வுகளை பிலாங்காலை மறைவட்ட பொறுப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்

**புனித இரண்டாம் ஜான்பால் திருப்பண்ட வரவேற்பு**

2023 அக்டோபர் 21 முதல் 24 வரை நடைபெறவுள்ள ஜீஸஸ் யூத் தேசிய மாநாட்டின் ஒருபகுதியாக இளையோர்களின் விண்ணகப் பாதுகாவலர் புனித இரண்டாம் ஜான் பால் அவர்களின் திருபண்டம் தக்கலை மறைமாவட்டம் கொண்டுவரப்பட்டது. 2023 ஆகஸ்ட் 20 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் தெற்றியோடு, புனித பவுல் ஆலயத்தில் சிறப்பான வரவேற்பு



அளிக்கப்பட்டது. தொடர்ந்து அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் அரைமணி நேர சிறப்பு ஆராதனை நடைபெற்றது.

**திருவோணக் கொண்டாட்டம் – படந்தாலுமூடு மறைவட்டம்**

படந்தாலுமூடு மறைவட்ட SMYM சார்பாக திருவோணக்கொண்டாட்டம் 2023 ஆகஸ்ட் 27 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணியளவில் படந்தாலுமூடு, திரு இருதய மறைவட்ட ஆலய வளாகத்தில் நடைபெற்றது. அருட்தந்தை




சுமேஷ் அவர்கள் தலைமை தாங்கினார். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தெற்றியோடு SMYM உறுப்பினர்கள் இறைவணக்கம் பாடினர். மறைவட்ட துணை செயலர் சபிதா வரவேற்புரை வழங்கினார். மறைவட்ட தலைவர் ஜெபின் நிகழ்வுகள் குறித்து எடுத்து கூறினார். பல்வேறு விதமான போட்டிகள் மற்றும் நிகழ்வுகள் நடைபெற்றன. இறுதியில் தெற்றியோடு ஆலய இளையோர்கள் முதல் பரிசும், பளுகல் ஆலய இளையோர்கள் இரண்டாம் பரிசும் பெற்றனர். நிகழ்வுகளை படந்தாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

***இவண்***

***அகில், செயலர்***

# வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| எட்டு நோன்பு துவக்கம் | – செப்டம்பர் 01 |
| குருக்களுக்கான கூட்டம் | – செப்டம்பர் 04 |
| CBCI – CHARIS செபம் நாள், மாலைக்கோடு | – செப்டம்பர் 04 |
| அன்னையின் பிறப்பு திருநாள் | – செப்டம்பர் 08 |
| அருட்தந்தையர் மற்றும் துறவியர் சங்கமம் | – செப்டம்பர் 16 |
| மறைமாவட்ட முதல் மாமன்றம் | – செப்டம்பர் 28-30 |




### மாதர் ஜோதிஸ் இயக்கம்

மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக இறைவார்த்தை எழுதும் போட்டி மற்றும் கதாபிரசங்கம் போட்டியானது அக்டோபர் 2 திங்கட்கிழமை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### திருமண ஆயத்தப் பயற்சி

திருமணத்திற்கு தயாராகும் இளையோர்களுக்கு திருமண ஆயத்தப்பயிற்சி ஆகஸ்ட் 11 மற்றும் 12 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இத்திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பில் 13 இளையோர் பங்குபெற்று பயன் அடைந்தார்கள். வருகின்ற செப்டம்பர் 8 மற்றும் 9 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பு



நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2023 ஜனவரி முதல் ஆகஸட் வரை 103 பேர் திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்புக்கு வருகை புரிந்து உள்ளனர். அவர்களின் விவரம் பின்வருமாறு.

| FAMILY APOSTOLATE , KALLUVILAI | | | |
|---|---|---|---|
| **Participants list for Marriage Preparation course from JANUARY 2023 to AUGUST 2023** | | | |
| **S.NO** | **PARISH NAME** | | **TOTAL** |
| **MANJALUMOODU FORANE** | | | |
| 1 | MUKKOOTTUKAL | HOLY FAMILY CHURCH | 4 |
| 2 | MUZHUCODE | ST.THOMAS CHURCH | 7 |
| 3 | MALAICODE | HOLY CROSS CHURCH | 5 |
| 4 | MANJALUMOODU | LITTLE FLOWER CHURCH | 4 |
| 5 | THETTIVILAI | ST.MICHEAL CHURCH | 0 |
| 6 | BENGIRI | ST.BENEDICT CHURCH | 1 |
| **KALIYAL FORANE** | | | |
| 7 | PALLIKONAM | SACRED HEART CHURCH | 1 |
| 8 | KARODE | ST.JOSEPH CHURCH | 0 |
| 9 | KALIYAL | ST.MARY CHURCH | 3 |
| 10 | MARAPADY | ST.THOMAS CHURCH | 8 |
| | KULASEKHARAM | ST.JOHN PAUL II CHURCH | 1 |
| **NITHRAVILAI FORANE** | | | |
| 11 | VARUTHATTU | ST.XAVIER CHURCH | 5 |
| 12 | NITHRAVILAI | JAYA MATHA CHURCH | 4 |
| 13 | MUNCHIRAI | ST.GEORGE CHURCH | 5 |
| 14 | VAYALINKARAI | ST.ANTONY'S CHURCH | 5 |
| 15 | CHRISTHURAJAPURAM | CHRISTHU RAJA CHURCH | 4 |
| 15 | CHEENIVILAI | AMALA MARIA CHURCH | 0 |
| **PADANTHALUMOODU FORANE** | | | |
| 17 | ANNIKARAI | ST.MATHEW CHURCH | 2 |
| 18 | PADANTHALUMOODU | SACRED HEART CHURCH | 6 |
| 19 | THETTIYODU | ST PAUL'S CHURCH | 2 |
| 20 | KAZHUVANTHITTAI | ST.MARTIN DE PORRES CHURCH | 2 |
| 21 | ATHENCODE | ST.MARIA GORETTI CHURCH | 1 |

| | | | |
|---|---|---|---|
| 22 | PALUKAL | ST.THOMAS CHURCH | 1 |
| 23 | KUNNUVILAI | ST.JOSEPH CHURCH | 1 |
| **SOOSAIPURAM FORANE** | | | |
| 24 | SOOSAIPURAM | ST.JOSEPH'S CHURCH | 3 |
| 25 | MANGARAI | ST.JAMES CHURCH | 4 |
| 26 | THAKKALIVILAI | HOLY FAMILY CHURCH | 4 |
| 27 | PILANKARAI | LORETTO MATHA CHURCH | 0 |
| 28 | KILLIYOOR | DEVA MATHA CHURCH | 1 |
| 29 | MATHAPURAM | ST.THOMAS CHURCH | 4 |
| 30 | PALAPPALLAM | CHRIST THE KING CHURCH | 0 |
| 31 | KUDUKACHIVILAI | ST.FATHIMA CHURCH | 0 |
| **ARUKANY FORANE** | | | |
| 32 | NETTA | ST.THOMAS CHURCH | 1 |
| 33 | MEZHACODE | ST.FRANCIS ASSISI | 0 |
| 34 | ARUKANY | HOLY FAMILY CHURCH | 1 |
| 35 | PATHUKANY | ST.THOMAS CHURCH | 0 |
| 36 | PENU | ST.MARY CHURCH | 0 |
| **THUCKALAY PILANKALAI FORANE** | | | |
| 37 | PILANKALAI | ST.LITTLE FLOWER CHURCH | 2 |
| 38 | PARAICODE | CHRIST THE KING CHURCH | 3 |
| 39 | KAISALAVILAI | ST.XAVIER CHURCH | 1 |
| 40 | KATTATHURAI | ST.MICHEAL CHURCH | 2 |
| 41 | ANAYADI | ST.GEORGE MISSION | 3 |
| 42 | ANJUGRAMAM | ST.THOMAS CHURCH | 0 |
| 43 | MAHARAJAPURAM | ST.MICHEAL CHURCH | 1 |
| 44 | THUCKALAY | ST.MARY,S CHURCH | 1 |
| 45 | NAGERCOIL | ST.ALPHONSA CHURCH | 0 |
| | **TOTAL NO OF CANDIDATES** | | **103** |

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***




# வின்சென்ட்-தே-பவுல் சபை

**ஆண்டுவிழா**

தக்கலை மத்திய பேரவையின் 26-வது ஆண்டு விழாவானது 20.08.2023, ஞாயிற்றுக்கிழமை முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலய அரங்கில் வைத்து நடைபெற்றது. ஆண்டு விழாவின் துவக்கமாக பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்களின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றபட்டது. அருட்தந்தை சுபின் புத்தன்புரைக்கல் அவர்கள் தலைமையில் விவிலியப் பவனி நடைபெற்றது. தொடர்ந்து காலை 11 மணியளவில் ஆண்டுவிழா பொதுக் கூட்டம் ஆரம்பமானது. தக்கலை மத்திய பேரவையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார். தக்கலை மத்திய பேரவையின் தலைமை பணியாளர் சகோ. றாபி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மத்திய பேரவையின் செயலர் சகோ. சோனிக் ரீகன் அவர்கள் அறிக்கை வாசித்தார். முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சுபின் புத்தன்புரைக்கல் மற்றும் மாலைக்கோடு திரு சிலுவை ஆலயத்தின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். குழித்துறை மத்திய சபையின் தலைமைப் பணியாளர் சகோ. பால்ராஜ் அவர்கள் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து வெள்ளி விழா இதழின் ஆசிரியர் சகோ. எட்வின்சன் அவர்களால் வெள்ளிவிழா மலர் வெளியிடப்பட்டது.



நிகழ்வின் இடையிடையே கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. தக்கலை மத்தியப் பேரவையின் துணை தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் நன்றியுரை கூற ஆண்டு விழா இனிதே முடிவடைந்தது.

**ஓசானாம் உயர்கல்வி நிலையம் - உத்திரம்கோடு**

உத்திரம்கோடு, ஓசானாம் உயர்கல்வி நிலையத்தில் 76-வது சுதந்திர தினவிழா 15.08. 2023 அன்று காலை 9.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கூட்டத்தின் தலைவராக சகோ.வில்சன் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றினார். நிகழ்ச்சியை மெருகூட்டும் விதத்தில் மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.



***சகோ. D.Pஷாஜி,***

***தகவல் தொடர்பு அலுவலர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து

**ஈசோ மெசியாவில் அன்பார்ந்தவர்களே..!**

அருள் சகோதரர்கள் அனைவரும் நலமாக உள்ளனர். புனித ஜான் மரிய வியான்னியின் திருவிழாவும், புனித கன்னிமரியாவின் விண்ணேற்பு திருவிழாவும், இந்திய நாட்டின் சுதந்திர தின விழாவும் ஓணப் பண்டிகையும் அனைத்து உயர் குருத்துவ கல்லூரிகளிலும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. திருத்தொண்டர் லின்றோ மற்றும் சென்னை திரு இதய உயர் குருத்துவ கல்லூரி திருத்தொண்டர்கள் நமது மறைமாவட்டத்தில் மறைப்பணிக்காக வந்திருந்தனர்.

அருள் சகோதரர் அனைவரும் தங்களது முதல் பருவத் தேர்வுகளுக்காக தயார் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே எங்களை உங்களது ஜெபங்களில் நினைத்து கொள்ளுங்கள். நன்றி.

***சகோ. சுனில் ஆன்றணி***

# கன்னியாகுமரி
## சமூக சேவை சங்கம்

### சித்த மருத்துவ முகாம்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் ஆற்றூர் மரியா மருத்துவகல்லூரி இணைந்து நடத்திய சித்த மருத்துவ முகாம் பென்கிரி, புனித பெனடிக்ட் ஆலய வளாகத்தில் வைத்து ஜூலை 28 ஆம் தேதி நடைபெற்றது. நிகழ்ச்சியில் KKSSS இயக்குநர் அருட்தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் வழிகாட்டுதலில் துணை இயக்குநர் அருட்தந்தை அஜின் C தலைமை தாங்கினார். இதில் மரியா சித்த மருத்துவ கல்லூரி பேரா. ஷாலினி “சித்த மருத்துவம் இன்றைய கால கட்டம்” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து சித்த மருத்துவர் சலினா தலைமையில் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் என 85 பேர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு இலவச பரிசேதனை செய்து இலவச மருந்தும் அளிக்கப்பட்டது. இதில் 2 மருத்துவர் உட்பட 18 பயிற்சி மருத்துவர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வை பென்கிரி களப்பணியாளர் திருமதி லதிகா அவர்களுடன் இணைந்து சுய உதவி மகளிர் நிகழ்வை ஒருங்கிணைத்தார்கள்.



### ஓணம் பண்டிகை

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம், சார்பில் பணியாளர்கள் இணைந்து அத்தப்பூ கோலமிட்டு, பல கலை நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டன. ஓணப்பண்டிகையை சிறப்பாக KKSSS ன் இயக்குநர் அருட்தநதை தலைமையில் பணியாளர்கள் ஒன்றிணைந்து ஆகஸ்ட் 26 தேதி சிறப்பாக கொண்டாடப்பட்டது

### ஓணக் கொண்டாட்டம்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கிழ் இயங்கும் சுயஉதவி குழுக்களின் சார்பில் மாறப்பாடி மற்றும் தெற்றியோடு மையங்களில் ஓணவிழா கொண்டாடப்பட்டது. ஆகஸ்ட் 18 தேதி மாறப்பாடி மையத்தில் வைத்து குழுக்கழுக்கான ஓணப்போட்டி நடைபெற்றது. இதில் மதர் தெரசா சுய உதவி குழு முதல் பரிசையும் பிலோமினாள் சுய உதவி குழு இரண்டாம் பரிசும் பெற்றுள்ளது. மேலும் ஆகஸ்ட் 26 தேதி நடைபெற்ற மாவட்ட அளவிலான ஓண அத்தப்பூ கோல போட்டியில் முதல் பரிசு ரூ5000 மதர் தெரசா சுய உதவி குழு பெற்றது.

ஆகஸ்ட் 25 தேதி தெற்றியோடு சுய உதவிக்குழு சார்பில் தெற்றியோடு, ஆசீர் வித்தியாலா சிறப்பு பள்ளி மாணவர்களோடு இணைந்து கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக அருட்தந்தை.சந்தோஷ் மற்றும் KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை அஜின் C மற்றும் சுய உதவி குழு உறுப்பினர்கள் என ஏராளமானவர்கள் சிறப்பு பள்ளி மாணவர்களோடு இணைந்து ஓண விருந்து மற்றும் கலை நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

### கல்வி உதவித்தொகை

ஏழை மாணவர்கள் ஆங்கில புலமையுடன் கூடிய திறமையானவர்களாக மாற்றுவதற்காக கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் Educare அலகு செயல்படுகிறது. இந்த அலகின் 3 நிலை மாணவர்கள் Educare பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்

இந்த அலகின் சார்பில் ஏழை மற்றும் ஆதரவற்ற மாணவர்களின் உயர் கல்விக்கு, ஆண்டுதோறும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது கழுவன் திட்டை பகுதியை சார்ந்த Educare முதல் அலகு (Batch) மாணவி அனுஷா என்பவருக்கு கல்வி உதவித்தொகையை KKSSS -ன் இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் மாணவியின் அம்மாவிடம் வழங்கினார்.

### EDUCARE -5 நிலை

தக்கலை மறைமாவட்டத்திற்குப்பட்ட ஏழை மாணவர்கள் ஆங்கில புலமையுடன் கூடிய திறமையானவர்களாக பயிற்சி அளித்து வருவது Educare அலகு. இந்த அலகு வழியாக 3 நிலை மாணவர்கள் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். இந்த அலகின் 5ம் நிலை புதிய மாணவர்களுக்கான EDUCARE வகுப்பு KKSSS அரங்கத்தில் வைத்து ஆகஸ்ட் 16 ஆம் தேதி நடைபெற்றது. 4 மற்றும் 5-ம் அலகு மாணவர்களுக்கான Educare வகுப்பு இதனை ஆசிரியர் பபின் ஜே வழிநடத்தினார்கள்.இதில் 37 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

# தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

## மானவர்களுக்கான கருத்தரங்குகள்

மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு சார்பாக, 2023 ஆகஸ்ட் 17 முதல் 27 வரையுள்ள நாட்களில் மறைமாவட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளில் இதயம் காப்போம் என்ற தலைப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. அதன்படி ஆகஸ்ட் 17 அன்று சூசைபுரம், APJM மெட்ரிக் பள்ளி வளாகத்திலும், ஆகஸ்ட் 18 அன்று சூசைபுரம், புனித அல்போன்சா கல்லூரி வளாகத்திலும், ஆகஸ்ட் 21 அன்று குலசேகரம், இரண்டாம் ஜான் பள்ளி வளாகத்திலும், ஆகஸ்ட் 22 அன்று கிறிஸ்துராஜபுரம், ஜெயமாதா பள்ளி வளாகத்திலும், ஆகஸ்ட் 23 அன்று படந்தாலுமூடு, திருஇருதய மெட்ரிக் மேல்நிலை பள்ளி வளாகத்திலும் நடைபெற்றது. தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வுப் பணிக்குழுவின் செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் CTC அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வகுப்புகளை வழிநடத்தினார். நலவாழ்வு பணிக்குழு இயக்குநர் அருட்தந்தை அஜின் C ஜோசப் மற்றும் அருட்சகோதரி சாஜிதா ASMI, ஆகியோர் நிகழ்வுகளை வழிநடத்தினர்.



## மருத்துவ முகாம்

முஞ்சிறை பகுதியில் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான மருத்துவ முகாம் மற்றும் விழிப்புணர்வு வகுப்புகள் 2023 ஆகஸ்ட் 19 சனிக்கிழமை மதியம் 2 மணியளவில் நடைபெற்றது. மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

இயக்குநர் அருட்தந்தை அஜின் C ஜோசப் அவர்கள் நிகழ்வுகளை ஒருங்கிணைத்திருந்தார்.

மாங்கரை, புனித வியாகப்பர் ஆலய வளாகத்தில் நலவாழ்வு கருத்தரங்கு மற்றும் மருத்துவ முகாம், 2023 ஆகஸ்ட் 20 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிக்கு பின் நடைபெற்றது. தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வுப் பணிக்குழுவின் செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் CTC அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வகுப்புகளை வழிநடத்தினார்.



***அருட்சகோதரி. டயானா SDS***
***செயலர்***

# *புனித மரியன்னை இளங்குருமடம் முக்கூட்டுகல்*

**புனித மரியன்னை இளங்குருமடம் முக்கூட்டுகல் 15/8/2023 அன்று நடை பெற்ற மாதாவின் விண்ணேற்பு திருநாள் மற்றும் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.**



# புலரி சமூக சேவை சங்கம்
## தென்காசி மறைபரப்புதளம்

### இந்திய விடுதலை நாள் கொண்டாட்டம்

புலரி சமூக சேவை மையத்தின் சார்பாக சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக பிரானூர் பஞ்சாயத்து தலைவி திருமதி ஆவுடையம்மாள் கலந்து கொண்டு தேசியக்கொடி ஏற்றி சுதந்திர தின விழா உரை நிகழ்த்தினார். நிகழ்வில் ஏராளமான சுய உதவிக் குழு மகளிர் மற்றும் புலரி தன்னார்வ குழு மாணவ மாணவியர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவை இயக்குனர் அருட்பணி மகேஷ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.



### நலவாழ்வு - கருத்தமர்வு

புலரி சமூக சேவை மையம் சார்பில் நலவாழ்வைக் குறித்த கருத்தமர்வு கட்டளை குடியிருப்பு என்னும் ஊரில் 27.08.2023 அன்று நடைபெற்றது. அருட்சகோதரி லிபியா CMC அவர்கள் கலந்து கொண்டு நல வாழ்வைக் குறித்து கருத்துக்களை பகிர்ந்ததோடு நோயின்றி வாழ்வதற்கான வழிவகைகளையும் குறிப்பாக இதய நோயிலிருந்து எவ்வாறு நம்மை காத்துக் கொள்வது என்பதை பற்றிய கருத்துக்களையும் மிகச் சிறப்பான முறையில் எடுத்துக் கூறினார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கற்குடி ஊராட்சி மன்ற துணைத்தலைவர் திருமதி. பாக்கிய லட்சுமி அவர்கள் கலந்துக்கொண்டு நிகழ்வை துவங்கி வைத்தார். புலரி மைய இயக்குநர் அருட்பணி மகேஷ் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்விற்கான ஏற்பாடுகளை புலரி சமூக சேவை சங்க களப்பணியாளர் திருமதி. மரிய செல்வம் அவர்கள் செய்திருந்தார்கள்.

புலரி அலுவலகப் பணியாளர் அருள் சகோதரி அல்போன்சா FCC அவர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள். இந்த கருத்தமர்வில் ஏறத்தாழ 100 பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**புலரி நோய்தணிப்பு அலகு**

புலரி சமூக சேவை மையத்தின் சார்பில் வீடுகளில் படுக்கையில் இருக்கும் நோயாளிகளை கண்டறிந்து அவர்களின் வீடுகளுக்குச் சென்று மருத்துவ உதவி செய்யும் திட்டம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. வாரத்திற்கு ஒருமுறை அருட் சகோதரிகள் அடங்கிய மருத்துவ குழு இல்லங்களுக்குச் சென்று படுக்கையில் இருக்கும் நோயாளிகளை கவனித்து அவர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்குவதோடு குளிப்பாட்டி சுத்தம் செய்து இறையன்பை பகிர்ந்து வருகிறார்கள். தற்போது புளியரை, மேக்கரை, வாஞ்சி நகர், வல்லம், தெற்கு மேடு, லாலா குடியிருப்பு, தேன்பொத்தை போன்ற சுற்று வட்டார கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 75 நோயாளிகள் இதன் மூலம் பயன் பெற்று வருகிறார்கள்.

**மகளிர் குழுக்களை சந்தித்தல்**



புலரி சமூக சேவை மையத்திற்கும் மக்களுக்குமான தொடர்பை வலுப்படுத்தும் வகையில் இயக்குநர் அருட்பணி மகேஷ் அவர்கள் சுய உதவி குழுக்களை சந்தித்து தேவையான ஆலோசனைகள் வழங்கி மக்களோடு கலந்துரையாடி வருகிறார். அத்தோடு புதிய குழுக்கள் துவங்க களப்பணியாளர்களை உற்சாகப்படுத்துகிறார். இந்த மாதம் தாட்கோ நகர் பகுதியில் ஒரு குழுவும் பகவதிபுரம் பகுதியில் ஒரு குழுவும் புதிதாக தொடங்கப்பட்டது.

***செய்தியாளர்***
***திருமதி.அனு கிறிஸ்டி***

# மறைமாவட்டச் செய்திகள்

## ▶ வியானி தின கொண்டாட்டம் – முக்கூட்டுகல்

புனித ஜான் மரியா வியானி திருவிழாவை 2023 ஆகஸ்ட் 4, வெள்ளிக்கிழமை அனைத்து அருட்தந்தையர் தின கொண்டாட்டமாக முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் காலை 9:30 மணியளவில் நடைபெற்றது நற்கருணை ஆராதனையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாயின. தொடர்ந்து அருட்தந்தையர்களுக்கும் அருட்சகோதரர்களுக்கும் இடையே கைப்பந்து போட்டி நடைபெற்றது. பின்னர் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் அவர்கள் தலைமையில் பொதுகூட்டம் நடைபெற்றது. இளங்குருமட புதிய ஆன்மீக குரு அருட்தந்தை சாக்கோ புதியபறம்பில் அவர்கள் வரவேற்றுப்பேசினார். அருட்சகோதரர்கள் தலைமையில் கலைநிகழ்வுகள் நடைபெற்றது. இளங்குருமட அதிபர் அருட்தந்தை ஐசக் புன்னூர் CMI மற்றும் குழுவினர் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

## ▶ புதிய திருப்பலி நூல் பயிற்சி

அனைத்து அருட்தந்தையர்களின் கூட்டம் மற்றும் புதிய திருப்பலி நூல் பயிற்சி தக்கலை, சங்கமத்தில் 2023 ஆகஸ்ட் 10 வெள்ளிக்கிழமை நடைபெற்றது. காலை 10:00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமானது, குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் தலைமை தாங்கினார். அருட்தந்தை. ஜஸ்டின் செறுவேலில், முழு நிகழ்வையும் வழிநடத்தினார். அருட்தந்தை. டோஜி பறம்பில்பறம்பில் புதிய வழிபாட்டுப் பாடல்களுக்குப் பாடும் பயிற்சி அளித்தார்.

## ▶ புனித அல்போன்சா அகாடமி கலை போட்டிகள் – நாகர்கோவில்

நாகர்கோவில், புனித அல்போன்சா அகாடமி சார்பாக பள்ளி மாணவர்களுக்கான கலை போட்டிகள் 2023 ஆகஸ்ட் 12 சனிக்கிழமை புனித ஆல்போன்சா மெட்ரிக் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. தமிழக சட்டமன்ற சபாநாயகர் திரு.அப்பாவு அவர்கள் நிகழ்வை துவக்கி வைத்தார். நாகர்கோவில் மாநகர மேயர் திரு. மகேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த சுமார் 80 பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவியர்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர். அனைத்து ஏற்பாடுகளும் அருட்தந்தை சனில் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.

### புதிய திருப்பலி நூல் செயல்படுத்துதல்

*2023 ஆகஸ்ட் 15, அன்னை மரியாவின் விண்ணேற்பு திருவிழா அன்று, மொழிபெயர்க்கப்பட்ட புதிய திருப்பலி நூல் செயல்படுத்தப்பட்டது. இனிவரும் அனைத்து திருவழிப்பாடு நிகழ்வுகளுக்கும் புதிய திருப்பலி நடைமுறைபடுத்தபடுகிறது என ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவரகள் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.*

### பருத்திவிளை சாந்தி நிலையத்திற்கு சிறப்பு விருது

*2023 ஆகஸ்ட் 15 சுதந்திர தினவிழாவை முன்னிட்டு தக்கலை மறைமாவட்டத்தைச் சார்ந்த, பருத்திவிளை சாந்தி இல்லத்திற்கு சிறந்த பயிற்சி பள்ளிக்கான விருது, தமிழக முதல்வர் திரு.மு.க ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டது.*

### புனித அல்போன்சா அகாடமி, பரிசு வழங்குதல்

*நாகர்கோவில், புனித அல்போன்சா அகாடமி 2023 ஆகஸ்ட் 12 நடைபெற்ற கலை போட்டிகளுக்கான பரிசு வழங்குதல் நிகழ்வு 2023 ஆகஸ்ட் 20 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிறுவனர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார். மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். இதில் படந்தாலுமூடு, திரு இருதய மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதலிடத்தையும், வடக்கன்குளம் SAV பாலகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி இரண்டாமிடத்தையும் பிடித்தது. அனைத்து ஏற்பாடுகளும் அருட்தந்தை சனில் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது*

### சீரோ மலபார் ஆயர் பேரவை – காக்கநாடு

*சீரோ மலபார் ஆயர் பேரவையின் மூன்றாவது அமர்வு காக்காடு மவுண்ட் செயின்ட் தாமஸ் உயர பேராய அலுவலகத்தில் 2023 ஆகஸ்ட் 21 முதல் 26 வரை நடைபெற்றது. நமது மறைமாவட்டத்திலிருந்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் கலந்து கொண்டார்.*

## இதர செய்திகள்

- அருட்தந்தை ஜியோ சுழிக்குந்நேல் அவர்கள் அனைத்து பங்குகளின் தணிக்கையாளராக 2023 ஜூலை 05 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.
- அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்களின் மூத்த சகோதரி, 2023 ஆகஸ்ட் 16 அன்று நித்திய ஓய்விற்கு அழைக்கப்பட்டார். அருட்தந்தையின் குடும்பத்திற்கு மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறோம்.
- அருட்சகோதரி மேரி லதா FCC அவர்களின் தாயார், 2023 ஆகஸ்ட் 18 அன்று நித்திய ஓய்விற்கு அழைக்கப்பட்டார். அருட்சகோதரியின் குடும்பத்திற்கு மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறோம்.
- பூந்தமல்லி குருமடத்தில் பயிலும் 6 திருத்தொண்டர்கள் நமது மறைமாவட்டத்தை பார்வையிட வருகை தந்தார்கள். ஆகஸ்ட் மாதம் 21 முதல் 26 வரை மறைமாவட்டத்தில் பல்வேறு பங்குகள் மற்றும் இயக்கங்களின் அலுவலகங்களை பார்வையிட்டனர்.
- அருட்தந்தை செபி மணிமலகண்டத்தில் 2023 ஆகஸ்ட் 30 அன்று திருத்தொண்டு பணிக்காக சவுதி அரேபியாவிற்கு சென்றுள்ளார்.
- காக்கநாடு மவுண்ட் செயின்ட் தாமஸில் 2023 செப்டம்பர் 11 முதல் 20 வரை நடைபெறும் அருட்தந்தையர்களுக்கான உருவாக்கல் பயிற்சியில் நமது மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ், அருட்தந்தை அஜீஷ் அட்டியில், அருட்தந்தை லிஜோ தெக்கேல் அருட்தந்தை அஜின் ஜோஸ் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.
- செப்டம்பர் 16 அன்று அருட்தந்தையர் மற்றும் துறவறத்தார் கூட்டம் தக்கலை சங்கமத்தில் நடைபெறவுள்ளது.
- அருட்சகோதரர் லிஜூ மாறாட்டுகளம், ஆயரின் தனிப்பட்ட செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். மறைமாவட்ட தேவைகளுக்கு bpssecretarytkly@gmail.com என்ற மின்னஞ்சல் அல்லது 85248 80828 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

# தென்காசி மறைத்தள செய்திகள்

**தென்காசி மறைத்தளத்தின் அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்ளின் கூட்டம்.**

அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டம் ஆகஸ்ட் 9 ஆம் தேதி மாலை 4 மணியளவில் பார்டரில் வைத்து நடத்தப்பட்டது. தென்காசி மறைத்தளத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் திருத்தப்பட்ட திருப்பலி நூலை பற்றி வகுப்புகள் நடத்தினார். அதன் பின் மறைமாவட்ட மிஷன் லீக் இயக்குநர் அருட்தந்தை பிரின்டோ அவர்கள் மிஷின்லீக் ன் புதிய தீர்மானங்களை குறித்து தொகுத்து வழங்கினார். அருட்தந்தையோடு இணைந்து மறை மாவட்ட ஆனிமேட்டர் அருட்சகோதரி ஆன்கிரேஸ் FCC அவர்களும் வருகை தந்திருந்தனர்.

தொடர்ந்து மாலை ஜெபம் (ரம்ஸா) நடத்தப்பட்டது, ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. பின்னர் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் அவர்கள் மற்றும் ஆவண காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் ஆகியோர் வருகை தந்து நிகழ்வை சிறப்பித்தனர். தென்காசி மறைத்தள ஒருங்கிணைப்பாளர் தந்தை அவர்கள் மறைத்தளத்தின் செயல்பாடுகளை எடுத்துக் கூறினார்கள். தொடர்ந்து பக்த இயக்கங்களின் செயல்பாடுகளைக் குறித்து கலந்துரையாடப்பட்டது.

**புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு திருவிழா மற்றும் சுதந்திர தினவிழா கொண்டாட்டம்.**

புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு திருவிழா, அனைத்து ஆலயங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. புளியரை ஆலயத்தில் சுதந்திர தின விழாவையொட்டி அருட்தந்தை பிரின்ஸ் அவர்கள் தேசிய கொடியேற்றினார்.

புலரி மெட்ரிக் மேல்நிலை பள்ளி வளாகத்தில் சுதந்திர தின விழாவை யொட்டி கொடியேற்றப்பட்டது. தொடர்ந்து குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

**ஆம்பூர் மறைத்தளம்.**

ஆம்பூர் மறைத்தளத்தில் சுதந்திர தின விழாவும் கன்னி மரியாவின் விண்ணேற்பு திருவிழாவும் நன்முறையில் சிறப்பிக்கப்பட்டது. அன்றைய தினம் மாலையில் திருப்பலியை தொடர்ந்து குழந்தைகள் மற்றும் பெரியோர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. ஏறக்குறைய 30 பேர் இதில் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர் அனைவருக்கும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டது.

**வாஞ்சி ஆலயத் திருவிழா.**

வாஞ்சி ஆலய திருவிழாவானது ஆகஸ்ட் மாதம் 18, 19, 20 ஆகிய தேதிகளில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆலய உதவி பங்குதந்தை அருட்தந்தை மகேஷ் அவர்கள் திருக்கோடியேற்றி திருவிழாவை துவங்கி வைத்தார். இரண்டாம் நாள் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. வல்லம் பங்குதந்தை அருள்பணி ஆரோக்கிய ராஜ் அவர்கள் தலைமை வகித்தார். இறுதி நாளில் அருட்பணி தாமஸ் சத்தியநேசன் அவர்கள் ஆடம்பர திருப்பலி நிறைவேற்றினார். தொடர்ந்து பவனியும் திருக்கொடி இறக்குதல் மற்றும் அன்பின் விருந்தும் நடைபெற்றது.

---

**Priests' and Religious Sangamam**

**Place: Sangamam**

**Date: 16 September 2023 at 09.30 am**

---

| FEASTDAYS OF REV. FATHERS - SEPTEMBER 2023 | |
|---|---|
| Fr. Abin Eettickal MCBS | 21 |
| Fr. Lijo Thekkel | 21 |
| Fr. Mathew Arekalam | 21 |
| Fr. Mathew Kuzhinjalil | 21 |
| Fr. Mathew Thekkekutt | 21 |
| Fr. Matheus Robert | 21 |
| Fr. Santhosh Kayyalaparampil | 21 |
| Fr. Michael Arokiaswamy SDB | 29 |

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### தூய மரிய கொரற்றி ஆலயம் – அதங்கோடு

புனித ஜான் மரிய வியானியின் திருநாள் ஆகஸ்ட் 4 அன்று மாலை 6 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமானது. தொடர்ந்து பங்குத்தந்தை அவர்கள் கேக் வெட்டி சிறப்பிக்க, பங்கு மக்கள் குருக்கள் தின வாழ்த்துகள் கூறி செபித்தனர். நிறைவில் நற்கருணை ஆராதனையோடு அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

புனித மரியாவின் விண்ணேற்பு மற்றும் சுதந்திர தினம் ஆகஸ்ட் 15 அன்று ஆலயத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 9.30 மணிக்கு தமிழ் தாய் வாழ்த்துடன் பங்குத்தந்தை, அருட்தந்தை ஆண்டனி மாடப்புரைக்கல் அவர்கள் கொடி ஏற்ற, உறுதிமொழியும் சொல்லப்பட்டது. பின் ஆலயத்தில் அன்னை மரியாவின் விண்ணேற்பு தின சிறப்பு திருப்பலியும் நடைபெற்றன.

திருவோணம் பண்டிகையை முன்னிட்டு ஆகஸ்ட் 29 அன்று 6:30 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து இளையோர்கள் சார்பில் பல்வேறு விளையாட்டுகளும் நடைபெற்றன. நிறைவில் அனைவருக்கும் பாயாசம் வழங்கப்பட்டது.

திருக்குடும்ப துறவற சபை அருட் சகோதரிகளின் இல்லங்களில் திருத்தூது பணியானது, அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயத்தில் ஆகஸ்ட் மாதம் 28 திங்கட்கிழமை அன்று தொடங்கியது. திருக்குடும்பத் துறவற சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி ஆஷா ஜான் அவர்கள் தலைமையில் 6 அருட் சகோதரிகள் பங்கிலுள்ள அனைத்து இல்லங்களையும் சந்தித்து வருகின்றனர். செப்டம்பர் 3 அன்று ஞாயிறு திருப்பலியுடன் நிறைவுற உள்ளது. ஏற்பாடுகளை பங்கு தந்தை மற்றும் திருக்குடும்பத் துறவற சபை, அருட்சகோதரிகள் செய்து வருகின்றனர்

## தக்கலை – பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

ஆகஸ்ட் மாதம் இரண்டாம் சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி மற்றும் ஆராதனை நடைபெற்றது. மாதாவின் விண்ணேற்பு திருவிழா சிறப்பாக திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. 27 ம் தேதி

திருவிழாவிற்கான மறைக்கல்வி போட்டிகள் நடைபெற்றது. அனைத்து நிகழ்வுகளையும் பங்குதந்தை முன்னின்று நடத்தினார்.

## மஞ்சாலுமூடு

- **திருக்குடும்ப ஆலயம் – முக்கூட்டுகல்**

முக்கூட்டுகல் திரு குடும்ப ஆலயத்தில் மாதாவின் விண்ணேற்பு நாளாகிய ஆகஸ்ட் 15 அன்று 12 மணி நேரம் ஆராதனை நடைபெற்றது. இறுதியில் ஆடம்பர நற்கருணை பவனியும் நடைபெற்றது.



## களியல்

- **இயேசுவின் திரு இருதய ஆலயம் – பள்ளிக்கோணம்**

பள்ளிக்கோணம், திரு இருதய ஆலயத்தில் 15.08.2023 அன்று மாதாவின் விண்ணேற்பு திருநாள் மற்றும் சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 6.45 மணிக்கு காலை ஜெபத்துடன் தொடங்கி, மாதாவின் விண்ணேற்பு திருநாள் திருப்பலி பங்குதந்தை அவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து ஆலய வளாகத்தில் தேசிய கொடி ஏற்றப்பட்டு உறுதிமொழி சொல்லி பின்னர் கலைநிகழ்ச்சிகளுடன் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது. காலை உணவானது இளையோர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இறுதியாக அனைவருக்கும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது.

புனித எவுப்பிராசியாவின் திருநாளை சிறப்பிக்கும் விதமாக 18.08.2023 முதல் தொடர்ந்து 9 நாட்கள் புனித எவுப்பிராசியாவின் நவநாள் ஜெபம் மாலை திருப்பலியை தொடர்ந்து நடைபெற்றது.

ஓணப் பண்டிகையைமுன்னிட்டு 27.08.2023 அன்று மறைக்கல்வி ஆசிரியர்களும் மாணவர்களும் கலாச்சார உடையணிந்து இப்பண்டிகையை சிறப்பித்தனர். ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து 2 குழுக்களாக பிரிக்கப்பட்டு பூக்களம் போட்டியில் கலந்து கொண்டனர்.



- **புனித இரண்டாம் ஜான் பால் ஆலயம் – குலசேகரம்**

  2023 ஆகஸ்ட் 15 அன்று மாதாவின் விண்ணேற்பு விழாவும் சுதந்திர தின விழாவும் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை ஜோஸ் கானாச்சிகுழியில் அவர்களால் புதிய திருப்பலி நடைமுறைபடுத்தப்பட்டது.

- **புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு**

  ஆகஸ்ட் 6 ம் தேதி மறை மாவட்ட மாமன்றத்திற்கான முன் வரைவு பங்கு பேரவை உறுப்பினர்களிடத்தில் விவாதிக்கப்பட்டது, மேலும் பெற்றோர்கள் மற்றும் இளையோர்களிடத்தில் மாமன்ற கருத்துக்கள் பெறப்பட்டு பங்களவில் ஒருங்கிணைக்கப்பட்டு மறைமாவட்டத்தில் ஒப்படைக்கப்பட்டது


  2023 ஆகஸ்ட் 15 அன்று மாதாவின் விண்ணேற்பு விழாவும் சுதந்திர தின விழாவும் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்களால் புதிய திருப்பலி நடைமுறைபடுத்தப்பட்டது. தொடர்ந்து, தேசிய கொடி ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது, அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

  ஆகஸ்ட் 27 ஞாயிற்றுக்கிழமை அன்று ஓணப்பண்டிகை கொண்டாடப்பட்டது. உறவிய அடிப்படையில் அத்தப்பூக்கோலப்போட்டி மற்றும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டது.

## சூசைபுரம்

### புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்

குருக்களின் பாதுகாவலர் தூய ஜாண் மரிய வியானியின் திருவிழா ஆகஸ்ட் 04 அன்று பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆண்டனி ஜோஸ் அவர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பின்னர் பங்கு மக்கள் அனைவரும் இணைந்து பாடல் பாடியும் வாழ்த்துரை வழங்கியும் பூங்கொத்து கொடுத்தும் பங்கில் இறைபணி புரியும் அருட்தந்தையர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.



ஆகஸ்ட் 15ஆம் நாள் விண்ணேற்பு அன்னை திருவிழா அன்று காலை 7.00 மணிக்கு ஆலயத்தில் பங்குத்தந்தை அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அன்றைய திருப்பலியில் புதிய திருப்பலி புத்தகம் நடைமுறைபடுத்தப்பட்டது. திருப்பலிக்கு பின்னர் அருட்தந்தை அவர்கள் தேசிய கொடி ஏற்றி மரியாதை செலுத்தப்பட்டது.

### பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்.

பாத்திமா அன்னை ஆலயத்தில் 4.8.2023அன்று உதவி பங்கு தந்தை ஜோஸ்மோன் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.அன்றையதினம் குருக்களின் பாதுகாவலர் புனித ஜாண் மரிய வியானி திருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டு இனிப்பு வழங்கப்பட்டது. அன்றைய தினம் நற்கருணை ஆராதனை நடைபெற்றது

12.8.2023அன்று புதிய ஆலயம் கட்டி இரண்டாம் ஆண்டு நிறைவு தினம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.முன்னாள் பங்குதந்தை சுபின் புத்தன்புரைக்கல் மற்றும் உதவி பங்கு தந்தை ஜோஸ்மோன் ஆகியோரால் ஆடம்பர நன்றி திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலி முடிந்த பிறகு



சிற்றுண்டி வழங்கப்பட்டது.

15.8.23அன்று மாதாவின் விண்ணேற்பு திருநாள் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் உதவி பங்கு தந்தை ஜோஸ்மோன் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலி முடிந்த பிறகு இனிப்பு வழங்கப்பட்டது. அன்றைய தினம் மூன்று மணி நேர ஜெபமாலை நடைபெற்றது. இதில் அனைத்து பங்கு மக்களும் கலந்து கொண்டார்கள்.

- **புனித வியாகப்பர் ஆலயம்– மாங்கரை**

ஆகஸ்ட் 1 முதல் மாதாவின் வண்ணேற்பு திருவிழாவை முன்னிட்டு குருசடியில் வைத்து 6.00 மணிக்கு செபமாலை நடைபெற்றது.

ஆகஸ்ட் 12 அன்று இளையோர்களுக்கான ஒருநாள் சுற்றுலா நடைபெற்றது. காலை 4.30 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து 5.15 மணியளவில் கொல்லம் முதல் கோவளத்தில் சுற்றுலா நடைபெற்றது. அருட்தந்தை, அருட்சகோதரிகள், இளையோர்கள் என 24 பேர் கலந்து கொண்டனர்.

2023 ஆகஸ்ட் 15 மாதாவின் விண்ணேற்பு திருவிழாவை முன்னிட்டு மாலை 5.30 மணிக்கு ஆடம்ப திருப்பலியும், செபமாலை பவனியும்



நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

2023 ஆகஸ்ட் 15 அன்று அருட்தந்தை டோஜி தலைமையில் அருட்சகோதரிகள், இளையோர்கள் இணைந்து கோட்டவிளை பகுதியில் 14 வயதுள்ள ரிதின் என்ற குழந்தைக்கு நற்கருணை வழங்கப்பட்டு, சிறப்பாக செபிக்கப்பட்டது.

2023 ஆகஸ்ட் 27 அன்று புனித அல்போன்சா உறவிய ஆண்டுவிழா மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. உறவிய மக்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் அன்பின் விருந்து நடைபெற்றது.

- **கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்**

ஆகஸ்ட் 4 ஆம் தேதி அருட்தந்தையர்களின் பாதுகாவலரான புனித ஜான் மரிய வியானித் திருநாள் கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் கேக் வெட்டி அன்றைய தினத்தை சிறப்பித்தார்கள். பங்குத்தந்தை அவர்களுக்கு பங்கின் சார்பில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 11 ம் தேதி மறை மாவட்ட மாமன்றத்திற்கான முன் வரைவு உறவியங்களிலிருந்து பெறப்பட்டு பங்களவில் ஒருங்கிணைக்கப்பட்டு மறை மாவட்டத்தில் ஒப்படைக்கப்பட்டது.

மாதாவின் விண்ணேற்பை சிறப்பிக்கும் வண்ணம் ஆகஸ்ட் 14 ஆம் தேதி வரை ஆலய கெபியில் தினமும் மாலை 5.30 மணிக்கு சிறப்பு ஜெபமாலை சொல்லி ஜெபிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 15 ஆம் தேதி காலை 6.30 மணிக்கு சிறப்பு திருப்பலியும் மாதாவின் விண்ணேற்பு குறித்த சிறப்பு நிகழ்வுகளும் நடைபெற்றது. இந்திய சுதந்திர தினத்தை சிறப்பிக்கும் வண்ணம் பங்குத் தந்தை அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றினார். செல்வி மோனிகா சிறப்புரை வழங்கினார். சூசைபுரம் மறைவட்டம் சார்பில் மாதம் தோறும் நடைபெறும் அரை நாள் தியானம் ஆகஸ்ட் 19 ஆம் தேதி நடைபெற்றது.

கேரளாப் பாரம்பரிய விழாவான ஓணம் பண்டிகை ஆகஸ்ட் 27 இல் பல்வேறு கலை நிகழ்ச்சிகளோடு கொண்டாடப்பட்டது. காலை திருப்பலியினைத் தொடர்ந்து மாவேலிப் போட்டியானது நடைபெற்றது. தொடர்ந்து இளையோர்களின் கலை நிகழ்ச்சிகளும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றது. அனைத்து நிகழ்வுகளையும் பங்கு இளையோர்கள் முன் நின்று நடத்தி சிறப்பித்தார்கள்.

- **தேவ மாதா ஆலயம் கிள்ளியூர்**

மாதாவின் விண்ணேற்பு திருவிழாவை முன்விட்டு 1-8-2023 முதல் 15-8-2023 மாலை 6 மணிக்கு திருப்பலியும் ஜெபமாலையும் மாதாவின் நவநாளும் நடைபெற்றது. ஆகஸ்ட் 15 ம் தேதி விண்ணேற்பு திருவிழா அன்று முழு நேர நற்கருணை ஆராதனையும் ஆடம்பர திருப்பிலியும் நடைபெற்றது.

தேவ மாதா உறவிய ஆண்டுவிழா, 15.8.2033 செவ்வாய்க்கிழமை, ஜெபமாலை பவனியுன் ஆரம்பமானது. ஆடம்பர திருப்பலி மற்றும் மன்றாட்டுகள் ஒப்புக்கொடுக்கப்பட்டது. தேவ மாதா உறவிய மக்கள் சிறப்பு காணிக்கை செலுத்தினார்கள். இறுதியில் அன்பின் விருந்துடன் நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

## நித்திரவிளை

- **ஜெய மாதா ஆலயம் – நித்திரவிளை**

ஜூலை இரண்டாம் தேதி புனித தோமையார் தின விழா காலை திருப்பலிக்கு பின் மறைக்கல்வி மாணவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைத்து மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிறப்பித்தனர். மூன்றாம் தேதி துக்ரானா திருநாள் சிறப்பு திருப்பலி நடைபெற்றது. பின் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி முடிய 15 நாட்கள் அன்னை மரியாவின் விண்ணேற்பு விழாவும் பங்கின் 63 வது ஆண்டு குடும்ப விழாவும் கொண்டாடப்பட்டது. 1 தேதி முதல் 6 தேதி வரை நித்திரவிளை பாத்திமா மாதா குருசடியில் ஜெபமாலையும், நவநாள் ஜெபமும் நடைபெற்றது. தொடர்ந்து 7,8,9 ஆகிய மூன்று நாட்கள் நற்செய்தி பெருவிழாவும் நடைபெற்றது. 10ம் தேதி மாலை 6.30 மணிக்கு பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் திருக்கொடி ஏற்ற திருவிழா ஆரம்பமானது. ஆகஸ்ட் 15 காலை 9.00 மணிக்கு மணிக்கு ராசா திருப்பலி பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் (ஆவணக் காப்பாளர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

29ஆம் தேதி ஓணம் பண்டிகை முன்னிட்டு மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமை தாங்க, அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து

கொண்டு வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பரிசு வழங்கினார்.

- **புனித அந்தோனியார் ஆலயம் – வயலங்கரை**

ஜூலை 2 தேதி துக்ரானா திருநாள் மறைக்கல்வி மாணவர்கள் சார்பில் கொண்டாடப்பட்டது. அனைத்து மாணவர்களும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தி சிறப்பித்தனர்.

ஆகஸ்ட் 15ஆம் நாள் மாதாவின் விண்ணேற்பு விழாவும் சுதந்திர தின விழாவும் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை அஜிஷ் அட்டியில் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டது.

29ஆம் தேதி திருவோணப்பண்டிகை கொண்டாடப்பட்டது. அனைத்து மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் அனைவரும் பூக்களப் போட்டியில் பங்கு கொண்டு சிறப்பித்தனர். வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்வுகள் அனைத்தையும் இளையோர்கள் முன்னின்று வழிநடத்தினர்.



- **புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை**

முன்சிறை புனித ஜார்ஜியர் திருத்தலத்தில் ஜூலை 3 தேதி மார்த்தோமாவின் நினைவு நாள் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாலை 6 மணிக்கு ஆடம்பர திருப்பலி அருட்தந்தை அனில்ராஜ் அவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலி முடிவில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. 06 தேதி; முதல் வியாழன் 12 மணி நேர தொடர் ஜெபமாலை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி ஒவ்வொரு உறவியமாக சிறப்பித்தனர். மாலை 6:00 மணிக்கு திருப்பலி மற்றும் ஆடம்பர நற்கருணை ஆராதனையும் குணமளிக்கும் ஜெபமும் நடைபெற்றது. பின் அனைவருக்கும் நேர்ச்சை விருந்து பரிமாறப்பட்டது.

ஆகஸ்ட் 4 ஆம் தேதி குருக்களின் பாதுகாவலர் புனித ஜான் மரிய வியானியின் திருநாள் சிறப்பு திருப்பலி நிறை வேற்றப்பட்டது. ஆகஸ்ட் 8 நாள் புனித டோமினிக் பெயர் கொண்ட திருநாள் நடைபெற்றது, ஞாயிற்றுக்கிழமை பங்கு மக்கள் அனைவரும் பெயர் கொண்ட புனிதரின் திருநாள் வாழ்த்து தந்தை அவர்களுக்கு சொல்லி, அவர்களுக்காக ஜெபித்தனர். ஆகஸ்ட் 15ஆம் நாள் அன்னையின் விண்ணேற்பு விழாவும் இந்தியாவின் சுதந்திரதின விழாவும் காலை 6:00 மணிக்கு திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை அனில்ராஜ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி தேசிய கொடியை ஏற்றி அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். முதல் வியாழன் 12 மணி நேர தொடர் ஜெபமாலை ஆராதனை 7 தேதி நடைபெற்றது. காலை 6 மணி முதல் எட்டு மணி வரை அருட்தந்தை மற்றும் அருட்சகோதரிகள் சிறப்பித்தனர். தொடர்ந்து உறவிய மக்கள் சிறப்பித்தனர். மாலை 6 மணிக்கு திருப்பலி அதனை தொடர்ந்து ஆடம்பர நற்கருணை ஆராதனை மற்றும் குணமளிக்கும் ஆராதனையும் நடைபெற்றது.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி ஷைலா | மெரின் சுஜித்**

---

# First Eparchial Assembly

## Place: Sangamam

## Date: 28-30 September 2023

## MONTHLY AGENDA – SEPTEMBER 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Fri | 10.00 am | Committee Meeting of CBCI – CHARIS Oneday Convention at Bishop's House |
| 3 | Sun | 09.00 am | PULARI: Health Awareness Programme at Kudiyirippu, Courtallam |
| 4 | Mon | 9.00 am<br>5.30 pm | Priests' Conference at Sangamam<br>CBCI – CHARIS Oneday Convention at Malaicode |
| 5 | Tue | | KII: Parish level Charity visit to the sick person in remembrance with the St. Theresa of Calcutta |
| 6 | Wed | 9.00 am<br>9.30 am<br>9.30 am | KKSSS: Educare class at Kalluvilai<br>CAT: One day Seminar for Catechism teachers at Kalluvilai<br>SMYM: Leaders' Training Program at, Kalluvilai |
| 7 | Thu | 9.00 am<br>6.30 pm | Visit by Protosyncellus to Jayamatha Matriculation School, Christurajapuram<br>Online Meeting for the Lay members of the Eparchial Assembly |
| 8 | Fri | 9.00 am<br>9.00 am<br>10.00 am<br>9.00 am | KKSSS: Celebration of International Girl Child Day at Kalluvilai<br>Visit by Protosyncellus to Sacred Heart Higher Sec.School Padanthalumoodu.<br>SINAI: Oneday Convention at Vattakottai<br>FA: Marriage preparation Course at Kalluvilai |
| 9 | Sat | 9.00 am | FA: Marriage preparation Course at Kalluvilai |
| 11 | Mon | 10.00 am<br>11.30 am | KKSSS : INFARM Meeting &<br>Board Members meeting of Thuckalay Nidhi Ltd. |
| 12 | Tue | 9.00 am | Visit by Protosyncellus to St.Alphonsa Matriculation School, Nagercoil |

| | | | |
|---|---|---|---|
| 13 | Wed | 09.00am | Visit by Protosyncellus to APJM Matriculation School, Soosaipuram. |
| 15 | Fri | 09.30 am | SINAI: One day Convention at Palappallam - Soosaipuram Forane |
| 16 | Sat | <br>9.00 am<br>9.00 am | **Episcopal Ordination day of Mar George Rajendran SDB**<br>Priests' and Religious Sangamam at Sangamam<br>KKSSS: Medical Camp at Chevilai |
| 17 | Sun | 9.00 am | PULARI: Seminar on Women Empowerment at ThadcoNaga |
| 23 | Sat | 9.30 am | SINAI: Oneday Retreat at SINAI Retreat Center, Kalluvilai<br>KKSSS: Medical Camp at Varuthattu |
| 24 | Sun | 9.00 am | CML: Unit Visit by Central Team |
| 25 | Mon | 9.00 am | DHC : World Heart Day Celebration at Sub Jail Nagercoil |
| 28 - 30 | | | Eparchial Assembly at Sangamam |
| 30 | Sat | | 19th Death Anniversary of Fr. Zacharias Kaithara |

**Fr.Thomas Powathuparampil, Protosyncellus**

## BISHOP'S ENGAGEMENTS - SEPTEMBER 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Fri | | Bishop's House |
| 2 | Sat | | Bishop's House |
| 3 | Sun | 8.30 am | Kazhuvanthittai: Holy Qurbana and Door step blessing |
| 4 | Mon | 09.30 am<br>05.00 pm | Sangamam: Priests' Conference<br>Malaicode: Holy Qurbana and Jericho prayer by Prayer for Indian team |
| 5 | Tue | 11.55 am | >>> Trissur |
| 6 | Wed | 11.55 am | Thrissur: Golden Jubilee Holy Qurbana >> Thuckalay |
| 7 | Thu | 09.30 am<br>06.00 pm | Curia Meeting<br>Bishop's House: Eparchial Assembly meeting with laity (Online) |
| 8 | Fri | 10.00 am<br>06.00 pm | Visit to Minor Seminary<br>Cheenivilai: Feastday Holy Qurbana |
| 9 | Sat | 03.00 pm | Thenkasi: Thenkasi Mission Meet and Holy Cross feast at Mekkarai |
| 10 | Sun | 04.00 pm | Palayamkottai: Golden Jubilee of the diocese |
| 11 | Mon | 10.00 am<br>11.30 am | Kalluvilai : INFARM Meeting & Board members meeting of Thuckalay Nidhi Ltd. |
| 12 | Tue | | Parish visit |
| 13 | Wed | 09.30 am | Curia meeting \| Parish visit |
| 14 | Thu | 10.00 am<br>5.30 pm | Padanthalumoodu: First death anniversary Holy Qurbana<br>Malaicode: Feastday Holy Qurbana |
| 15 | Fri | | Parish visit |

| | | | |
|---|---|---|---|
| 16 | Sat | 09.00 am<br>02.00 pm | Episcopal Ordination of Mar George Rajendran SDB<br>Sangamam: Priests' and Religious Sangamam<br>Sangaman : Eparchial Assembly meeting with religious members |
| 17 | Sun | | Bishop's House |
| 18 | Mon | | Parish visit |
| 19 | Tue | 10.30 am | Soosaipuram: St. Alphonsa College Governing Body meeting |
| 20-22 | | 6.30 am | Poondi: Health Care Commission TOT program |
| 23 | Sat | | Bishop's House: Visitors from NE India and Kakkanad |
| 24 | Sun | 8.30 am | Manjalumoodu: Feast day Holy Qurbana |
| 25 | Mon | | Curia meeting |
| 26 | Tue | 6.30 pm | Kattathurai: Feast day Holy Qurbana |
| 27 | Wed | | Bishop's House |
| 28-30 | | | First Eparchial Assembly |
| 30 | Sat | 07.00 pm | Panavilai: Vespers |

**Dn. Liju Marattukalam, Bishop's Secretary**




**Health Care Commission Rally & Seminar,
St.john Paul II Matric School, Kulasekharam, 21.08.2023**



**Onam Celebration, Minor Seminary,
Mukkuttukal, 26.08.2023**



**Pulari Social Service Society, Tenkasi,
Health Awareness Program, 27.08.2023**



**ST.LORETTO MATHA CHURCH, PILANKARAI,
PARISH FEAST, 20.08.2023**



**ST.VINCENT DE PAUL SOCIETY,
ANNUAL DAY MUKKUTTUKAL, 20.08.2023**

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570